
உ
சிவமயம்



# ஒப்பிலாஜோதி

29.01.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலியைப் பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை
வசிப்பிடமாக் கொண்ட

அமரர்

## திரு. முருகேசபிள்ளை ஒப்பிலாமணி

அவர்களின்

# ஒப்பிலாஜோதி

**29.01.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து

அன்போடும் பண்போடும்

பாசத்தோடும் எம்மைப் பேணிப் பாதுகாத்து

நல்வழி நடாத்தி

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

எமது அன்புத் தெய்வத்தின்

பொன்னடிகளில் காணிக்கையாக

இந்நினைவு மலரினை

சமர்ப்பணமாக்குகிறோம்.

**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

என் தந்தை



மண் மகிழ 1929 10 19

மனம் நெகிழ 2005 12 30

# அமரர்

# முருகேசபிள்ளை ஒப்பிலாமணி

## தீதி வெண்பா

ஆண்டு பார்த்திப அமைந்த நல் மார்கழியில்
பூண்ட அமாவாசைத்திதியிலே
ஈண்டு புகழ் ஒப்பிலாமணி ஐயா பிறவிக்கடல் தாண்டி
சிவனார் திருவடி சேர் தினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

என் தாய்

மலர்வு 1932 01 07



உதிர்வு 2004 03 18

# அமரர்

# ஒப்பிலாமணி புவனேஸ்வரி

## திதி நிர்ணயம்

ஆண்டு சுபானு அமைந்தநற் பங்குனியில்
பூண்ட திரி யோதசித் திதியே ஈண்டுபுகழ்
புவனேஸ் வரியன்னை பிறவிக்க கடல் தாண்டிச்
சிவனார் திரு வடிசேர் தினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் ஒப்பிலாமணி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழ மண்ணில் இணையில்லா சிறப்புடனே விளங்குகின்ற
யாழ்மண்ணில் புனிதபூமி செந்தமிழும் சைவமும்
சீர் பெற்று இலங்கு திருப்பதியாம்,
வட்டுக்கோட்டை யிலே அராலி தெற்குக் கிராமத்திலே
உயர் சைவ வேளாள மரபிலே
உதித்தவரே. நம் ஒப்பிலாமணி ஐயா
சங்கரத்தை பத்திரகாளி கோவில் உரிமையாளர்
வழித் தோன்றலும் விநாசி உடையார்
பரம்பரையில் நாகநாதருக்கு கிளைத்த பெருமகனாம்
முருகேசபிள்ளை வட்டுக்கோட்டை கதிரேசு உடையார்
பேர்த்தி தங்கம்மாவுடன் செல்வச் சிறப்போடு
சேர்ந்த திருமணத்தில் நன் மக்கள் மூவர்
நலங்காண உதித்தனரே ஒப்பிலாமணி யார்க்கு
உடன் பிறப்பு இருவரும் அக்கா
நாகரத்தினத்தோடு அண்ணா சச்சிதானந்தமும் நில்லா
உலகத்தில் நிலைத்திருக்கும் உண்மையாம் பொல்லா
மரண மெனும் பொன்னாடு சென்றிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா நாகரத்தினம் ஆனைக்கோட்டை பதியில்
மணியகாரர் சகோதரர் இராமலிங்கத்தை கைப்பிடிக்க
அண்ணா டாக்டர் சச்சிதானந்தமோ உடுவில்
வேதாரணியார் வளவு தர்மேஸ்வரியை மணம்புரிந்தார்.
யாம் இன்று நினைந் துருகும்
ஒப்பிலாமணியே வீட்டுக்கு இளையவர் ஆவார்.
ஐயா ஒப்பிலாமணியின் அருமைகளை நினைத்திடுவோம்
ஆயிரத்து தொளயிரத்து இருபத்து ஒன்பது
ஐப்பசி மாதத்து பத்தொன்ப தாம்
நாள் ஐயா பிறந்த தினம்.
சின்ன வயதினிலே கல்வியை உள்ளூரில்
தொடங்கினரே பின்னர் யாழ் இந்துவோடு
கொக்குவில் இந்துவில் விருப்புடனே தொடர்ந்தனரே.
London Matriculation யாழ்ப் பாணக்
கல்லூரி யில் முடித்து சட்டக்
கல்லூரி யையும் சென்றடைந் தனரே.
இடையினிலே விதிப்பயனால் அதனையும் துறந்து
ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்து மூன்றிலே
கிராம அதிகாரி யாய் ஆயினரே.
திருமணப் பருவத்தில் தேடி நல்
மணமகளாய் வண்ணஊராம் வண்ணார் பண்ணையிலே
மிடுக்கொடு வழ்ந்த சிறாப்பர் குடும்பத்தில்
சின்னத்தம்பி தன் மனைவி சிவக்கொழுத்து
பெற்றெடுத்த செல்வச் சீமாட்டியாம் மங்கை
புவனேஸ்வரி நல்லாளை ஆயிரத்து தொளாயிரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுப்பத்தாறு மாசிஎட்டாம்நாள் மணவினை முடித்தனரே.
எல்லாச் செல்வமும் இசைந்தமண வாழ்க்கையிலே
இல்லையே பிள்ளை எனும் ஏக்கமதைப்
போக்கிடவே பெண்மகளைப் பெற் றெடுத்து
பேர் சுமதி என இட்டு
நற்கலை மானியாக்கி நலம் திகழும்
யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை ஆசிரியை ஆக்கினரே!
புவனேஸ்வரி நல்லாளின் அக்கா நாகம்மாவும்
அண்ணா சபாபதிப் பிள்ளையும் பின்னாளில்
இறைவனடி போய் அமரர் ஆயினரே.
அன்னையவள் உடன் பிறப்புக்களாய் தரணியிலே
வாழ்பவர்கள் அம்பிகை பாகனெனும் அருமருந்து
ஒரு தம்பி வித்தகராம் பத்மநாதன்
கை பிடித்த பத்மாவதி என்னும்
பண்புடைய நாயகியார் தங்கை யுமாம்
சீராரும் பெறாமக்கள் ஐவருண்டு அண்ணலுக்கு
சச்சிதானந்தம் தர்மேஸ்வரி மக்கள் கௌரி
மணமகன் பாலகுமாருடன் நோர்வே யில்
நீரஜா தனுஷன் மக்க ளுடனும்
சக்திக்குமார் என்பார் தர்மினியை மணம்புரிந்து
கனடாத் திருநாட்டில் கவி னுறவே
வாழ்கின்றார் பிறேமிதா நர்மிதா வுடன்
சுபத்திரா தம் கணவர் விஜய
குமாரோடு நன்மக்கள் விதுஷா ஆனந்
சகிதம் பிரிட்டிஷ்மண்ணிலே பிரியமுடன் வாழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன் பத்மாவதி மக்கள் நல்
'பத்மாஸ்' பதிப்பகத்து உரிமையாளர் நிர்மலச்
செல்வனும் கனகரத்தினம் மகா வித்தியாலய
நிதித் திட்டமிடல் உதவியாளர் அங்கயச்
செல்வியும் வாழுகின்றார் யாழ்ப்பாணத் திருநாட்டில்.
எல்லாச் சிறப்போடும் வாழ்கையிலே உரிய
பிராயத்தின் முன் ஆயிரத்து தொளாயிரத்து என்பத்து
மூன்றிலே ஆர்வத்துடனே எடுத்த ஓய்வூதியம்
பின் வாழ்வு செஞ்சிலுவைப் பணி என்றும்
நாகபூசணி அம்மன் தொண் டென்றும்
சைவ மகாசபை கடமை என்றும்
சிறப்புடனே கழிகையிலே வந்ததே பேரிடி
இரண்டாயிரத்து நான்கு பங்குனி பதினெட்டிலே
அன்னை புவனேஸ்வரி சென்றனரே இறைவனடி
அன்னாரின் மனதிலும் சூழ்ந்ததோ அந்தகாரம்
முடித்ததோ இவ் வுலக வாழ்வு
இரண்டாயிரத்து ஐந்து மார்கழி முப்பதில்
சென் றடைந்தனரே ஈசன் பாதத்தில்.

**"நெருநல் லுளனொருவ னின்றில்லை யென்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணிக்கே அவதரித்த இறையருளாளர்

அராலி தெற்கைப்பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அமரர் ஒப்பிலாமணியவர்கள் சிறந்த கல்விமான் ஆவார். அவர் சிறந்த கிராம சேவையாளராக யாழ் குடாநாட்டின் வலிகாமப் பகுதிகளில் உள்ள பல கிராமங்களில் பணிபுரிந்து அதனால் அவர் ஓர் சிறந்த சமூக சேவையாளர் என்ற அந்தஸ்தை பெற்று அனேக மக்களின் நெஞ்சங்களில் சிறந்த இடம் பிடித்துள்ளார்.

இவ்வாறாக அவர் சமூகசேவைகளிலும் மேலாக சமயப் பணிகளில் பெரும் பங்காற்றியுள்ளார் அவர் "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்தவ வானில் நனி சிறந்தனவே" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க தனது பிறந்த சொந்த ஊரான அராலியில் தன் குல தெய்வங்களான அராலி அகாயக்குலம் விநாயகர் தேவஸ்தான புனரமைப்பு திருப்பணிகளிலும் அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் புனரமைப்புத் திருப்பணிகளிலும் பெரும் பங்கு கொண்டுள்ளார்.

இந்த வகையில் அராலி தெற்கு அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானத்தின் உள் சுற்றுப் பிரகாரத்தில் தெற்கு வாசல் வரையிலான உள் கொட்டகைகளுக்கு வேண்டிய அனைத்து தூண்களைக் கட்டுவித்ததுடன் தெற்கு வாசல் கொட்டகையும் அதற்கான நில காரை ஆகியவற்றையும் செய்வித்தார். அத்துடன் விநாயகரின் தீர்த்தோற்சவ உபயத்தையும் சில காலம் செய்து வந்தார் அது மட்டுமல்லாமல் தேவஸ்தானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய முன்னேற்றத் திருப்பணிகள் நடை பெற தன்னாலான ஆக்கபூர்வ ஆலோசனைகள் வழங்கி பெரிதும் ஒத்துழைப்பு நல்கினார்.

அவ்வாறே அமரர் அவர்கள் அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வெளிப்புற இடப்பக்கம் கொட்ட கையையும் அதனுடன் சேர்ந்த பக்க அறைகள், தற்போதய பரிபாலனசபைக் காரியாலயம் உட்பட, மூன்றையும் கட்டுவித்தார். அத்துடன் தேவஸ்தான குருவின் குடும்பத் தினர்க்கு வீடு ஒன்றையும் கட்டுவித்தார். இவ்வாறாக அம்பாளின் தேவஸ்தானம் சிறக்க பல திருப்பணிகளைச் செய்தார். அத்துடன் பல வருடங்களாக அம்பாளின் வருடாந்த மகா சங்கு அபிஷேகத்தினையும் பொறுப்பேற்று செய்து வந்ததுடன் இவ் விழா சிறப்புற நிறைவேறமறைந்த நாகலிங்கம் விதானையாருடன் பக்க பலமாக நின்று நடத்து வித்தார் மேலும் அம்பாளின் விஜயதசமி தின அபிஷேகத் தினையும் பல ஆண்டுகளாக பொறுப்பேற்று நடாத்தி வந்துள்ளார்.

மேலும் ஆலய விழாக்களின்போதும் மற்றும் தனது தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகளிலும் அந்தணப் பெருமக்களை மதித்து நன்கு கௌரவித்து அவர்களுக்கு தன்னால் ஆன தெட்சனைகள் காணிக்கைகள் கொடுத்து அவர்களை மிகையாக சிறப்பித்தும் வந்துள்ளார்.

இவ்வாறாக அமரர் ஒப்பிலாமணி அவர்கள் தன் வாழ்நாளில் செய்த சமூகவளர்சிப் பணிகளுக்கு மேலாக ஆலயங்கள் சிறக்கவும் அந்தணர் கௌரவமாக வழவும் ஆலய திருப்பணிகள் பல செய்வித்து சிறப்புற வாழ்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இன்று உலகில் இல்லையாயினும் அவர் தம் புகழுடல் மறையாது மக்கள் எல்லோர் நெஞ்சங்களிலும் என்றென்றம் நிலைத்து நிற்பவராவார்.

அன்னாரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தியடைய அவர்தம் குல தெய்வங்களான எல்லாம் வல்ல அகாயக்குளம் விநாயகரையும் ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாளையும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தலைவர்

பரிபாலன சபை

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் சைவ மகாசபையினரின்

# இதய அஞ்சலி

ஈழமணித் திருநாட்டிலே, சைவாலயங்களும், நன்பயிர் செய்நிலங்களும் நிறைந்தும், புராண இதிகாசங்கள் படிப்பவர்கள், பயன் சொல்பவர்கள், திருமுறைகளைப் பண்ணோடு ஓதுபவர்கள் பலர்நிறைந்து வாழந்து வந்த, சிறப்புப் பெற்ற திரு ஊர் அராலி என்னும் ஊராகும். இவ்வூரிலே தோன்றியவர் அமரர் உயர்திரு M. ஒப்பிலாமணி அவர்கள் அராலி தெற்கு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாளிடம் அளவுகடந்த பக்தி கொண்டவர். இறைவனுக்குச் செய்யும் பணியை தனது வாழக்கை கடமை என பணிசெய்து வந்தவர் மக்கள் சேவையே மகேசன் சேவையென வாழ்ந்து வந்தவர். சமூக சேவைகள் பலவற்றை மனப்பூர்வமாக செய்து எல்லோருடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானார். 1986ம் ஆண்டு தொடக்கம் நல்லூர் சைவ மகாசபையில் கௌரவ செயலாளராகப் பணியாற்றி நல்லூர் முருகன் மகோற்சவ காலங்களில் இச்சபையினால் நடாத்தப்பட்டுவரும் தெய்வீகத்தொடர் இசைப்பேருரையை வருடாவருடம் வெகுசிறப்பாக நடாத்த உறுதுணையாக இருந்து அரும்பணியாற்றிய சீலராவார். இவருடன் ஏறக்குறைய 40 வருடகாலம் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்ததை பெரும்பாக்கியமாக நினைக்கின்றேன்.

அமரர் திரு M. ஒப்பிலாமணி அவர்கள் நல்லூர் சைவ மகாசபையின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி, பல கைங்கரியங்கள் நிறைவேற்றி எங்கள் அன்புக்கும் மதிப்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியவரானார் என்றால் மிகையாகாது. ஆகவே, அமரர் அவர்களின் மறைவு பேரிழப்பாகும்.

மனித வாழ்வு அநித்தியமானது அல்லவா? "பிறந்தோர் இறப்பது உறுதி" என்ற நியதிக்கேற்ப எம்மை துயரக்கடலில் மூழ்கவைத்துவிட்டு பிரிந்துவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்மென எல்லாம்வல்ல நல்லைக் கந்தனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது மறைவினால் மீளாத்துயருறும் அவரது அன்பு மகள், மற்றும் குடும்பத்தினருக்கும் எமது சபையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

**"கானகதிவாரிதி"**
**பிரம்மஸ்ரீ. சிவ. வை. நித்தியானந்தசர்மா**
**(அமைப்பாளர் – நல்லூர் சைவ மகாசபை)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலதுறைச் சேவையாளர் ஒப்பிலாமணி

எனது நண்பரும் உறவினருமான ஒப்பிலாமணி கொக்குவில் இந்துக் கல்லூரியில் என்னோடு படித்தவர். படிக்கின்ற காலத்தில் மாணவர் மத்தியில் தலைமைப்பண்பு உள்ளவராக விளங்கியதால் மாணவத் தலைவர் ஆக்கப்பட்டார். அப்பதவியில் இருந்த காலத்தில் அவர் மாணவர்களை வழிநடத்தியதுடன் கல்லூரி நிர்வாகத்திற்கும் உதவி புரிந்தார்.

அந்த இடத்தில் எங்கள் பாதைகள் பிரிந்தன. நான் பல்கலைக்கழகம் சென்றேன். அவர் மேலும் கல்விகள் கற்று இறுதியில் கிராம சேவகரானார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல கிராமங்களில் அவர் பணிபுரிந்தார். தனது கடமையைச் சரிவரச் செய்ததுடன் அந்த அந்தக் கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவும் உழைத்தார்.

அராலி தெற்கு - கிழக்கு கிராமத்தில் தான் அவரது சேவை மிகச் சிறந்து விளங்கிற்று கிராமத்தின் விதானை உடையார் மரபில் வந்த அவர் தனது குடும்ப கௌரவத்திற்கு ஏற்ப கிராம முன்னேற்றத்திற்காக பல வேலைகள் செய்தார். எனது மைத்துனர் நாகலிங்கம் அராலிக் கிராம சபையின் தலைவராக இருந்த காலத்தில் புதிய வீதிகள் அமைத்தல் பழைய வீதிகளைத் திருத்துதல் கிராமத்திற்கு நீர் வழங்கல் மின்சாரம் வழங்கல் போன்ற பல பணிகளிலும் அவருக்கு பக்கபலமாக நின்று உழைத்தார்.

ஒப்பிலாமணி சமையப்பற்று மிக்கவர். தான் கடமைபுரிந்த கிராமங்களின் கோவில்கள் எல்லாவற்றிக்கும் தொண்டுகள் செய்தார். ஊரவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அராலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோவிலில் சங்காபிஷேகத்தை விமரிசையாகக் கொண்டாடிவருகின்றனர். அதில் அவருக்கு முக்கிய பங்கு கொண்டு வருடந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து அம்பாளுக்கு அபிஷேகங்கள் செய்வித்து வந்தார். கோவில் தர்மகர்த்தா அ.வ. சுப்பிரமணியம் காலத்துடன் நின்று விட்டிருந்த கோவில் புனரமைப்பு வேலைகளை மீண்டும் தொடக்கிவைத்த பெருமை அனைத்தும் ஒப்பிலாமணியையே சாரும்.

ஊர்க் கோவில்களுக்கு மட்டுமல்லாது எந்தக் கோவிலுக்கு யார் போய் நன்கொடை கேட்டாலும் தாராளமாக வழங்குவார்.

ஒப்பிலாமணி வண்ணார்பண்ணையில் உள்ள செல்வம் செல்வாக்குமிக்க சிறாப்பர் குடும்பத்தில் திருமணம் செய்தவர் அவரது பாரியார் அமரர் புவனேஸ்வரியும் மைத்துனர் அம்பிகைபாகனும் மகள் சுமதியும் அவர் செய்யும் நற்பணிகளுக்கெல்லாம் பெரும் ஆதரவு புரிந்தனர்.

இளம் வயதில் நாங்கள் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அராலியில் நாடகங்கள் நடிப்போம். அந்த நாடகங்களில் நடித்ததுடன், எங்கள் நாடகப் பணிகளுக்கு உறுதுணையாகவும் இருந்தார்.

ஒப்பிலாமணியின் மறைவு அராலிக் கிராமத்திற்கு மட்டுமல்லாது அவரது சேவையைப் பெற்ற எல்லோருக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிராத்திப்போமாக.

**கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி அஞ்சலி

"உலகம் நிலையற்றது வாழ்வும் நிலையற்றது" இது இயற்கைநியதி ஆனால் தன் சேவையையும் நேர்மையையும் நிலை நிறுத்துவதே சிறந்த பேறாகும். திரு.மு. ஒப்பிலாமணி அவர்களின் திடீர் மறைவு எனக்கும் என் ஆசிரியர் குழாத்துக்கும் ஜீரணிக்க முடியாத சோகத்தைத் தந்துள்ளது. மனைவியின் பிரிவினால் துயருற்றிருந்த அவர் நோய்வாய்ப்பட்டு சிலகாலம் இருந்தார். அவர் மக்கள் சுற்றம் பேணும் அன்பராய், தமது சமூகம் காக்கும் நெறியாளனாய் சிறப்பாகச் சேவை செய்து உயர்ந்து நின்ற உத்தமனிதன். ஒரே மகளின் மீது அளவுகடந்த அன்பும் பாசமும் அக்கறையும் கொண்டவர். தன் மகளின் வளர்ச்சியில் மகிழ்ச்சி கொண்டவர். உயர்ச்சியில் உள்ளம் களித்தவர். தன் நண்பர்களின் நலத்தில் பங்கு கொண்டு நலம் அளித்தவர்.

இப்படி எல்லா இடத்திலும் நான் இன்னாரெனத் தடம்பதித்தவர். இவர் இன்று இல்லை. காலன் அரவணைத்துக் கொண்டு விட்டான். தவிக்கும் அன்புமகளினதும் உறவுகளினதும் வேதனை சொல்லும் தரமன்று. எம் பாடசாலைச் சமூகத்தினரின் கரங்கள் அவர்களின் துயர் துடைக்க என்றும் துணை நிற்கும்.

அமரராகிவிட்ட திரு. மு. ஒப்பிலாமணி அவர்களின் ஆத்மசாந்திக்காகவும் அவர்தம் குடும்பத்தினரின் மன அமைக்காகவும் நாம் அத்தனை பேரும் கண்ணீரோடு பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தியடைவோம்

ஆக்கி அளித்தே உலகில் யாவும் காத்து அழிக்கும் நலம்
பூக்கும் அரன் ஆற்றல் மாற்றவும் மிகவரிதே - பார்மீதில்
தோற்றும் பொருள் அனைத்தும் மாற்றமின்றியே நீள் நிலைத்திடுமோ
சோற்றுப் பானையுள் சேர்ந்திட்ட அரிசிபோல்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**திரு. வே.ஞானகாந்தன்**
**அதிபர்**
**யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பற்ற கட்சித் தொண்டன்

அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி விதானையார் அவர்களின் திடீர் மறைவையிட்டு எனது சார்பிலும் எனது அ.இ.த.கா.கட்சி அங்கத்தினர் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி அவர்கள் எனது இளம் பிராயத்தில் இருந்து நன்கு அறிந்தவர். 1947ம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் காலஞ்சென்ற தன்னிகர் இல்லா தனிப்பெரும் தலைவன் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் வழி காட்டலில் தன் பயணத்தை தொடர்ந்தவர் அவர் தம் கொள்கைக்காக உயிர் உள்ளவரை போராடியவர். கட்சிக்கு பல சோதனைகள் ஏற்பட்ட போதெல்லாம் தனயன் குமார் பொன்னம்பலத்துடன் தோளோடு தோள் நின்றவர். 1977ம் ஆண்டு யாழ்ப்பாண தொகுதியில் தேர்தலை நடாத்தி காட்டியவர். கொண்ட கொள்கைக்காக தன் நிலை மாறாதவர். எமது கட்சியில் பலர் கட்சி மாறிய போதும் இறுதிவரை எமது கட்சியே மூச்சாக கொண்டு இயங்கிவர்.

1963ம் ஆண்டு கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கிராம சேவையாளரானார். அன்று தொட்டு ஓய்வு பெறும் வரை குடும்ப நலனை விட மற்றவர்களுக்கு உதவுவதிலே முன்னின்றார். பழகுவதற்கு மிகச் சிறந்த நண்பராகவும் கடமைகளைச் செவ்வனவே ஆற்றுபவருமான அவர் எப்பொழுதும் தனது குடும்ப இறுமாப்பை கொண்டு விளங்கினார். கடமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியமாக கடமையை செய்து எல்லா கிராம மக்களிடமும் உண்மையாக நடந்து நன்மதிப்பை பெற்றார். கோவில் திருவிழாக்களை முன் நின்று நடாத்தி மக்களின் அன்பை பெற்றவர்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**


**வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற முதுமொழிக்கு ஏற்ப வாழ்ந்து வந்தார்.

இவரது ஆத்மா சாந்தியடையவும் இவரது இழப்பை தாங்கக்கூடிய மனோவலிமையை குடும்பத்தார் பெறவும் இறைவனை பிராத்திக்கின்றேன்

அ. விநாயமூர்த்தி
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தலைவர்
**அ.இ.த.கா.கட்சி**

12B 3/1, ஸ்ரேசன் றோட்,
வெள்ளவத்தை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உணர்வுகளுடன் நின்று நினைக்கிறோம்

நிறுவனங்கள் எல்லாமே அதன் ஸ்தாபிதப் பருவத்தின் வளர்ச்சிக்குப் பின்னால் சில தனிமனிதர்களின் சேவைகளையும், அர்ப்பணிப்புகளையும் கொண்டிருக்கும். அவை உருவாக, அத்தகையவர்களை காலம் உருவாக்கித் தன் கடமையை நிறைவேற்றும். எமது யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தைப் பொறுத்தவரை அத்தகையவர்களின் ஒருத்தர்தான் அண்மையில் அமரரான ஒப்பில்லா மனதரான முருகேசபிள்ளை ஒப்பிலாமணி அவர்கள் நிறுவன உறுப்பினர்களின் ஒருவராகவும் தலைவராகவும் விளங்கியவர்.

அமரர் ஒப்பிலாமணி அவர்கள் தான் சங்கத் தலைவராக இருந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் சேவையில் இருந்து ஒய்வுபெற்ற பின்னரும் கூட யாழ் பெரிய கடைத் தொகுதியில் தனக்கு சொந்தமான ஒரு கட்டிடத்தினை எவ்வித கொடுப்பனவுமின்றி எமது சங்க பணிமனை செயற்பட விட்டிருந்தார். மேலும் இப்போது போலன்றி, அன்று மிகவும் சிறு தொகையினராக உள்ள கிராம சேவர்களின் சொற்ப சந்தா தொகையை கொண்டு செயற்பட கஷ்டப்பட்ட வேளைகளில் அவர் தம் சொந்தப் பணத்தை விட்டு - ஆண்டுக் கூட்டங்கள் போன்றவை சிறப்புடன் நடை பெற உதவியமையும் நன்றியுடைமையுடன் நினைவு கூறுகின்றோம்.

அமரர் ஒப்பிலாமணியின் மீது எல்லோரும் நன்மதிப்பு வைத்திருக்க, ஆங்கில மொழி ஞானமும், கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையில் அவர்க்கிருந்த திடமான பற்றுறுதி என்பன மட்டுமன்றி அவரது கம்பீரமான தோற்றமும் காரணமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. என் பதவி பறிபோனாலும் பரவாயில்லை என்று தன் கொள்கைக்காக அவர் தீவிரமாக செயற்பட்டமை பற்றி அவரின் பெயர் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதை பாராளுமன்ற பதிவேட்டில் காணலாம். ஆனால் அவர் இவற்றை தன்னுடைய பட்டம் பதவிகளுக்காக என்றுமே பயன்படுத்திக் கொண்டதில்லை. எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு தன் செல்வாக்கை பயன்படுத்திக் கொண்டார். இன்று நாடெங்கும் அள்ளி இறைக்கப்படும் ஜே.பி. நியமனத்தை விரும்பியிருந்தால் 1980லேயே பெற்றிருக்க முடியும். இலங்கை செஞ்சிலுவை சங்கத்தில் அப்போதே இணைந்து செயற்பட்ட அவர் இத்தகையவற்றை விரும்பவில்லை.

ஆழ்ந்த இறைபக்தி கொண்ட அவரின் மறைவை, தாயாரின் மறைவை சந்தித்த சொற்ப காலத்திற்குள்ளேயே சந்தித்து கலங்கும் ஆசிரியரான அவரின் மகளுக்கும் உறவினர், நண்பர்களுக்கும், எமது சங்கம் தன் ஆழ்ந்த கவலையை தெரிவித்து கொள்கின்றது.

இயற்கை தான் வென்று விட்டதாக பெருமைப்படலாம். ஆனால் அமரர் ஒப்பிலாமணி போன்ற மனிதர்கள் எம்மைப் போன்ற நிறுவனங்களின் - அவை எவ்வளவுதான் சிறிதெனிலும் இறப்பிற்குப்பின்னால் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

வாழ்க அவர் நாமம்

யாழ் மாவட்ட

கிராம உத்தியோகத்தர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவையாளரின் கண்ணீர்

அராலியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற கிராம சேவையாளரும் சமூகசேவையாளருமான அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி அவர்களை செஞ்சிலுவைச் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராக சேர்ந்து மனிதநேய செஞ்சிலுவைச் சங்க கோட்பாடுகளுக்கமைய சிறந்த தொண்டாற்றிய பெருந்தகை. இவரது சேவையை செஞ்சிலுவைச் சமூகம் என்று மறப்பதற்கில்லை.

இவரது இழப்பு செஞ்சிலுவைச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருடன் எமது கவலையைப் பகிர்வதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம்
தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் மாவட்ட கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்
1929
10
19



மறைவு
2005
12
30

## அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி

முன்னாள் தலைவர் – யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கம்

கிராம அதிகாரியாய் கீர்த்தியுடன் பணிபுரிந்த
விசால மனம் கொண்டவரை விதி பிடுங்கிச் சென்றதுவே!
கோயில் பூசையென்றால் கோணா மனம் கொண்டவரை
சாவெனும் வல்லரக்கன் தன்வாயில் எடுத்தனனோ?
அஞ்சாமல் தன்கருத்தை யார்வரினும் எடுத்துரைக்கும்
நெஞ்சுரம் மிக்கவரின் நினைவுகளை மறப்போமோ?
செந்தமிழும் ஆங்கிலமும் சீர்மையுறக் கற்றிருந்தும்
பட்டம் பதவிக்காய்ப் பல்லிளிக்காச் சான்றோனே
ஒப்பிலா மணியென்னும் ஒப்பிலா மனிததுயர்
கப்பிடும் மனத்தோடு கண்ணீரால் விடை தந்தோம்
மன்னனாய் நடைபோட்டு எம்சங்கப் பிதா மகனே
அன்னை புவனேஸ்வரியை அணைந்திடவே விடை தந்தோம்

யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்
யாழ்ப்பாணம்.

31.12.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஓம் எனும் பிரணவரூப நாயகா

உமையவளின் பாலனே விநாயகா

தேவர் மூவர் போற்றும் வேத நாயகா

தேவாதி தேவனே விநாயகா

வல்வினைகள் தீர்க்கும் சக்தி நாயகா

வேண்டும் வரம் தந்திடும் விநாயகா

மோனத்தின் முழுப்பொருளே நாயகா

முக்கண்ணன் மைந்தனே விநாயகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமசிவாயப்பத்
தேத்த வல்லார் தமக் கிடுக் கணில்லையே

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமே மேருவில்வீரா
ஆறணி சடையெம்மற்புதக் கூத்தா
அம்பொன் செயம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளளவில்லாதோ
ரானந்தவெள்ளப் பொருள்
பண்டுமின் றுமென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சீராரும் சதுர்மறையுந் தில்லை வாழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ் சலியுந்தொழுதேத்த
வாராருங் கடல்புடை சூழ்வையமெலாமீடேற
ஏராருமணி மன்றுளெடுத்த திருவடி போற்றி.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலத் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனை நாளும்
கண்டு கொண்டின்புற்றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவை பாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றிற் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் துதி

## நாகபூசணி அம்மன்

தாயே மகாசக்தி - எங்கள் தாயே மகாசக்தி
கதறிடும் எங்களின் கடிவினை களைந்திட-காரிகையானவளே
(தாயே)

சிவசிவ சிவசக்தி வரம் தினமருள் ஜெயசக்தி
குருவடிவானவளே எங்கள் குறைகளை தீர்த்தருளே
(தாயே)

கடல்போல் துயர் நடுவே நாம் கலங்கிடும் வேளையிலே
களபாவோடையிலேஎம்மைக் காக்கவென்று இருப்பவளே
(தாயே)

உறவினர் உதவியில்லை எமக்குதவிட யாருமில்லை
நாம் படுகின்ற துயரமதை உந்தன் பார்வையால் தீருமம்மா
(தாயே)

அணைத்திட ஒருவரில்லை எமக்கு ஆறுதல் அளிப்பாரில்லை
அன்னையே உன்னையல்லால் எமக்கு ஆறுதல் அளிப்பவர்யார்
(தாயே)

பாடிடும் எங்கள் முன்னே நீயும் பறந்தோடி வாவேனம்மா
ஓடியே வந்து எங்கள் உறுபிணி தீருமம்மா
(தாயே)

அன்னையே அன்னை என்று நாம் அலறுவது கேட்கலையோ
பரிவுடன் ஓடி வந்து இந்தப் பாவிகளை காத்திடம்மா
(தாயே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கற்பகவல்லி பாமாலை

கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதியருள்வாய் அம்மா தேவி

(கற்பகவல்லி)

பற்பலரும் போற்றும் பதிமயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட

(கற்பகவல்லி)

நீ இந்த வேளை தன்னில் சேயன் என்னை மறந்தால்
நானிந்த மாநிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌனம் அம்மா? ஏழையெனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தருளும் அம்மா

(கற்பகவல்லி)

எல்லோர்க்கும் இன்பங்கள் எல்லாம் விரும்பி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல்புரியும் அந்த
உல்லாசியே உமா உனை நம்பினேன் அம்மா

(கற்பகவல்லி)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக்காப்பாய்
வாகேஸ்வரி மாயே வாராய் இது தருணம்
பாலேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா
லோகேஸ்வரி நீயே இந்த உலகம் நீயம்மா

(கற்பகவல்லி)

அஞ்சன மையிடும் அம்பிகையே எம்பிரான்
கொஞ்சிக்குலாவிடும் வஞ்சியே உன்னிடம்
தஞ்சம் என அடைந்தேன் தாயே
ரஞ்சனியே ரக்ஷிப்பாயே உன்னை நான் கெஞ்சுகிறேன் அம்மா

(கற்பகவல்லி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு பெண்

சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை உடை உடுத்தி
சிவங்கை குளத்தருகே சீர் துர்க்கை சிரித்திருப்பாள்

பெண்ணிவளின் கண்ணழகை பேசி முடியாது
பேரழகிக்கு ஈடாக வேறொன்றும் கிடையாது

மின்னலைப் போல் மேனி அன்னை சிவகாமி
இன்பமெல்லாம் தருவாய் எண்ணமெல்லாம் நிறைவாய்

பின்னல் ஜடை போட்டு பிச்சிப்பூ சூட்டிடுவாள்
பித்தனுக்கு இணையாக நர்த்தனமும் ஆடிடுவாள்

# கற்பூர நாயகி

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வானையம்மா!

விற்கோல வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனம் முழுதாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரிந்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!

கவலைகளைத் தீர்த்து விடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமை சிறியேனை நீயாதரி.

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அந்நியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!

கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவளின் குரல் கேட்டு முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாட வேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே பாட வேண்டும்
பக்தியுடன் கை உனையே கூப்ப வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமெல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்.
மண்ணைக்கும் சமயபுர மாரியம்மா இந்த
மகனுடைய குறைகளையே தீருமம்மா!

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினுள் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்.

சுற்றமெல்லாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளளாமா!

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணுக்கு இமையன்றிக் காவலுண்டோ!
கன்றுக்குப் பசுவின்றிச் சொந்த முண்டோ!

முன்னைக்கும் பின்னைக்கும் பார்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நானடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகமலிருக்க வேண்டும்
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்

கும்பிடவோ கையிரண்டும் போத வில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆக வில்லை!

செம்பவளவாயழகி உன்னெழிலே!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே! உன்னை என்றும்
அடிபணியும் இசைக்கோர் அளவுமில்லை.

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கயிறாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உடலாகினாய்

தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் துதி

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க – வெற்பைக்
கூறு செய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க – செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ் சீர் அடியாரெல்லாம்

# விஷ்ணு துதி

பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட தின்தோள் மணிவண்ணா
உன்சேவடி சென்னிதிருக் காப்பு.

# வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர் பாடல்

இனியேதெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அனியாய மாயிந்தவுடலை நான் என்று வரும்
அந்தகற்காளாகவோ.
ஆடித்திரிந்து நான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய்ப்போதல் நன்றோ
கனியேனும் வறிய செங்காயேனும் உதிர்சருகு
கந்த மூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்து நான்
கண்மூடி மௌனமாகித்
தனியே இருப்பதற் கெண்ணினேன் எண்ணிமிது
சாமி நீ அறியாததோ
சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே

தந்தை தாய் தமர்தாரம் மகவென்னும் இவையெலாா்
சந்தையிற் கூட்டம் இதிலோ
சந்தேகமில்லை மணி மாடமாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வு மோர் இந்திரசாலக்கோலம்
வஞ்சனை பொறாமை கோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த மனமாங்கிருமி சேர்ந்த மலபாண்டமோ
வாஞ்சனையிலாத கனவே
எந்த நாளுங் சரியெனத் தேர்ந்து தேர்ந்துமே
இரவு பகலில்லாவிடத்
தேகமாய் நின்ற நின் அருள் வெள்ளமீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும் வகை என்கொலோ
தேடரிய சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே

## பட்டினத்தார் பாடல்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவேன் யான்
செய்யுந் திருவொற்றி ஊருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுந்தோதவும் கற்பியுமே.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர்வ ஸ்வஹ
தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீ மஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Gender

| I | Masculine | Feminine |
|---|---|---|
| | Actor | Actress |
| | Author | Authoress |
| | Conductor | Conductoress |
| | Duke | Duchess |
| | Emperor | Emperess |
| | God | Godess |
| | Giant | Giantess |
| | Instructor | Instructress |
| | Manager | Manageress |
| | Master | Mistress |
| | Murder | Murderess |
| | Patron | Patroness |
| | Poet | Poetess |
| | Priest | Priestess |
| | Prince | Princess |
| | Bachelor | Spinster |
| | Boy | Girl |
| | Bridegroom | Bride |
| | Brother | Sister |
| | Father | Mother |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Gentleman | Lady |
| Hero | Heroine |
| Husband | Wife |
| King | Queen |
| Lord | Lady |
| Lad | Lass |
| Male | Female |
| Man | Woman |
| Monk | Nun |
| Nephew | Niece |
| Son | Daughter |
| Sir | Madam |
| Uncle | Aunty |
| Tailor | Tailoress |
| Waiter | Waitress |
| Father -in -law | Mother-in - law |
| Son -in-law | Daughter- in-law |
| Postmaster | Postmistress |
| Postman | Postwoman |
| Landlord | Landlady |
| Grandfather | Grandmother |
| Headmaster | Headmistress |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| II Masculine | Feminine |
|---|---|
| Bull | Cow |
| Bull - calf | Cow - calf |
| Cock | Hen |
| Dog | Bitch |
| He -goat | She - goat |
| Billy -goat | Nanny - goat |
| Tom - cat | Tabby - cat |
| Buck | Doe |
| Buck - rabbit | Doe -rabbit |
| Pea -cock | Pea - hen |
| Cock - sparrow | Hen - Sparrow |
| Tiger | Tigress |
| Stallion (horse) | Ewe |
| Wolf | She - wolf |
| Lion | Lioness |
| Leopard | Leopardess |
| Eagle | Eagle |
| Owl | Owl |
| Bull (elephant) | Cow |
| Cock (pigeon) | Hen |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Young Ones

| | | |
|---|---|---|
| I | Man | Child/Baby |
| | Bear | Cub |
| | Deer | Fawn |
| | Rabbit | Rack |
| | Elephant | Calf |
| | Whale | Calf |
| | Seal | Calf |
| | Hen | Chicken |
| | Lion | Cub |
| | Tiger | Cub |
| | Dog | Puppy |
| | Cat | Kitten |
| | Pig | Piglet |
| | Duck | Duckling |
| | Cow | Calf |
| | Owl | Owlet |
| | Sheep | Lamb |
| | Horse | Foal |
| | Gorse | Kid |
| | Fox | Cub |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| II | Bee | Grub |
| | Bird | Nestling |
| | Frog | Tadpole |
| | Toad | Tadpole |
| | Wasp | Grub |
| | Butterfly | Catterpillar |

# Homes

| | | |
|---|---|---|
| I | **Person** | **Home** |
| | Eskimo | Igloo |
| | Red Indian | Wigwam |
| | King | Palace |
| | Noble | Castle |
| | Minister | Manse |
| | Priest | Temple |
| | Monk | Monastery |
| | Nun | Convent |
| | Parson | Parsonage |
| | Man | House |
| | Peasant | Cottage |
| | Soldier | Camp/Barracks |
| | Convict | Prison |
| | Lunatic | Asylum |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| II | Creture | Home |
|---|---|---|
| | Bear | Den |
| | Bee | Hive |
| | Bird | Nest |
| | Cow | Byre |
| | Dog | Kennel |
| | Horse | Stable |
| | Lion | Lair, Den |
| | Mouse | Hole, Nest |
| | Pig | Sty |
| | Rabbit | Burrow |
| | Spider | Web |
| | Tiger | Lair |
| | Wasp | Nest, Vespiary |

# The Best Things in Life

| | | | |
|---|---|---|---|
| Beauty | says | the | Artist |
| Sports | says | the | Athlete |
| Kindness | says | the | Child |
| Healing | says | the | Doctor |
| Power | says | the | Engineer |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| Abundance | says | the | Farmer |
| Pleasure | says | the | Fool |
| Food | says | the | Glutton |
| Love | says | the | Maiden |
| Commerce | says | the | Merchant |
| Gold | says | the | Miser |
| Home | says | the | Mother |
| Order | says | the | Policema |
| Truth | says | the | Sage |
| Honour | says | the | Soldier |
| Fame | says | the | Statesman |
| Knowledge | says | the | Student |
| Rest | says | the | Toiler |

# Do you Know

1. A doctors' "listening" instrument - Stethoscope
2. Magnifies tiny objects - microscope
3. Makes distant objects look bigger - telescope
4. Measures heat and cold - thermometer
5. Measures heat of the body - clinical thermometer
6. Forecaste weather - barometer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. Helps the voice to carry - megaphone
8. Picks up sound for sending out again - microphone
9. Carries messages by wire - telephone
10. Carries sounds with out use fo wires - wireless
11. Carries messages by wire across the sea - cable
12. Takes photographs - camera
13. Takes photographs through the body - X-rays
14. Glasses used for bettering the eyelight - specta cles
15. A machine for measuring time - clock
16. Gives direction - Compass
17. Attracts iron - Magnet
18. Propluces electricly - Dynamo
19. A ship which can travel below the water - submarine





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Wonders of The World

## Seven Wonders of The Ancient World

The Pyramids of Egypt
The Hanging Gardens of Babylon
The Tomb of Mausolus at Halicarnassus
The Temple of Diana at Ephesus
The Colossus at Rhodes
The Statue of Jupiter at Olympus
The pharos Lighthouse at Alexandria

(Of the above seven wonders of the ancient world only the great pyramids of Egypt survive today.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Wonders of The Middle Ages

The Colosseum of Rome

The Leaning Tower of Pisa

The Catacombs of Alexandria

The Great Wall of china Stonehenge

The Porcelain Tower of Nanking

The Mosque of St. Sophia in Constatinople.

# Wonders of The Modern World

(Man Made Structures)

Simplon Tunnel

The Sky-scrapers of Newyork (U.S.A)

The Boulder Dam of Colorado (U.S.A)

The panama canal (Central America)

The Golden Gate Bridge at San Francisco (U.S.A)

The Taj Malal at Agra (India)

A modern British ocean liner



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Useful Information

The Principal languages of the world are as follows.

Chinese, English, Russian, Western Hindi, Spanish, German, French, Japanese, Portuguese and Italian.

The Continents are:-

Europe, Asia, Africa, America and Australia.

The Oceans are:-

Atlantic, Pacific, Indian, Aretic and Antarctic.

The Iargest islands are:-

Greenland, Newguinea, Bornco, Madagascar and Baffin Land.

The Greatest Lakes are:-

Caspian sea (U.S.S.R), Lake Superior (North America) Lake Victoria Nyanza (Central Africa) Aral Sea (U.S.S.R.) Lake Haron (North America) and Lake Michigan (North America)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The highest mountains of the world are, all in the

Himalayan mountain Range in Northern India. - Mt - Everest, Mt. Goduin -Austin, Mt. Kange henjunga, Mt. Nanga parbat and Mt. Kamet

The longest rivers are

Missouri - Mississippi (United states) Amazon (Brazil) Nile (Egypt) Yangtse Yenesei (Russia) (china) Congo (Certral Africa) and Lena (Russia)

The largest cities of the world are:-

| | | |
|---|---|---|
| London | - | England |
| New York | - | U.S.A |
| Tokyo | - | Japan |
| Berlin | - | Germany |
| Chicago | - | U.S.A |
| Shanghai | - | China |
| Paris | - | France |
| Moscow | - | (Russia) |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவர்
**திரு. முருகேசபிள்ளை ஒப்பிலாமணி**
அவர்கள் நோயுற்ற வேளையில் பேரு
தவி புரிந்தவர்களுக்கும், இறுதிக்
கிரியைகளில் நேரில் கலந்து எம்
துயரில் பங்கு கொண்டும் மலர்
வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலி வெளி
யிட்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும்
ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இன்றைய
அந்தியேட்டி சபிண்டீகரண வீட்டுக்
கிரியைகளில் பங்கு பற்றி
அன்னாரின் ஆத்ம சாந்
திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும், யாழ் இந்து
ஆரம்ப பாடசாலை சமூகத்துக்கும் யாழ்
மாவட்ட கிராம உத்தியோகத்தர்
சங்கத்தினர்க்கும் எமது இதயம்
கனிந்த நன்றிகளை தெரிவித்துக்
கொள்கின்றோம்

**556, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

## கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

பாராளுமன்ற உறுப்பினர்

யாழ் மாவட்டம்

*"கீதாஞ்சலி" 15 இராணி வீதி கொள்ளுப்பிட்டி கொழும்பு -03*

*தொலைபேசி 011 2581677 தொலை நகல் 011 2586254*

**27.01.2006**

**சிறந்த நண்பரை இழந்து விட்டோம்...**


அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துன்புறும் பலருள் நானும் ஒருவன். நீண்டகாலமாக நான் சார்ந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியுடனும் எனது தந்தையாருடனும் நெருக்கமான தொடர்புகளைப் பேணி கட்சியை வளர்ப்பதில் துணையாக நின்றவர் அவர். கிராம சேவையாளராக பணியாற்றிய இவர் தனது பதவி மூலம் சிறந்த சேவைகளை மக்களுக்கு வழங்கினார். எவருடனும் அன்பாகப் பழகும் சிறந்த பண்பாளராக திகழ்ந்த இவர் எமது குடும்ப நண்பனாக இருந்து எமக்கு பலவழிகளிலும் உதவியவர் இவரது இழப்பால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

ஜீ.ஜீ. பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்சா வழி

...சிவக்கொழுந்து
(...டயாரின் மகள்)

செல்லம்மா
\+
சிவப்பிரகாசம்

சின்னத்தம்பி
\+
சிவக்கொழுந்து

நாகம்மா

சபாபதிப்பிள்ளை
\+
சரஸ்வதி

புவனேஸ்வரி

அம்பிகைபாகன்
\+
கனகாம்பிகை

பத்மாவதி
\+
பத்மநாதன்

நிர்மலச் செல்வன்
அங்கயச்செல்வி

...சுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

பத்மாஸ் 28/1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org